**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 355 நாள்: 05.08.2026

**அண்ணாநகர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (05.08.2026) மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், வார்டு-95க்குட்பட்ட எம்.டி.எச். சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மைப் பணி மற்றும் தூய்மைப் பணியாளர்கள் மூலம் ஈரக்கழிவுகள் பெறும் நடவடிக்கைகள், தான்தோன்றி அம்மன் தெருவில் உள்ள அம்மா உணவகம், அப்பகுதியில் 'உள்ள புஷ்பாஞ்சலி அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள் (BWGs) திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026-ஐ பின்பற்றுகின்றனரா என்பது குறித்தும், வார்டு-94க்குட்பட்ட வில்லிவாக்கம், டி.வி.எஸ். கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் தடுப்புச்சுவர் உயர்த்திக் கட்டுதல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணி, சிட்கோ நகர், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியினை மேம்படுத்துவது குறித்தும், அப்பகுதியில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியினை மேம்படுத்துவது குறித்தும், சிட்கோ நகர், 5வது தெருவில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமூக நலக்கூடம், சிட்கோ நகர் பிரதான சாலையில் உள்ள காலி இடத்தில் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டுவதற்கான இடம் உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள், நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை விரைந்து முடித்திடவும், சாலைகள் மற்றும் தெருக்களில் அன்றாட தூய்மைப் பணி மேற்கொள்ளவும், அம்மா உணவகங்களில் தயாரிக்கப்படும் உணவினைத் தரமாக வழங்கிடவும், சமையலறையினைத் தூய்மையாகப் பராமரித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**